தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை
www.nie.ac.lk

# தரம் ஒன்றிக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளை இனங்காணல்

## (ஆரம்பப் பாடசாலைக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்)



முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

வளைத்தளம் : www.nie.ac.lk மின்னஞ்சல் : info@nie.lk

# தரம் ஒன்றிக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளை இனங்காணல்

## (ஆரம்பப் பாடசாலைக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம்...)

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

மின்னஞ்சல்: info@nie.ac.lk
வலைத்தளம் :www.nie.ac.lk

# தரம் ஒன்றிக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளை இனங்காணல்

## (ஆரம்பப் பாடசாலைக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் ...)

முதலாம் பதிப்பு : 2025
தேசிய கல்வி நிறுவகம்

**ISBN**

அச்சுப்பதிப்பு :

முன்பிள்ளைப் பருவ விருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

## வளப் பங்களிப்பு (2024)

**ஆலோசனை :** பேராசிரியர் மஞ்சுளா விதானபதிரன
பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

கலாநிதி தர்ஷன சமரவீர
பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.

**நெறிப்படுத்தல்:** திருமதி. ஆர். எம். கே. த. சில்வா
பணிப்பாளர்
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும், ஆரம்பக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**செவ்விதாக்கமும் இணைப்பாக்கமும்:**
திருமதி. எஸ். ஆர். ரம்புக்வல்ல, சிரேட்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும், ஆரம்பக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

**தொழினுட்பக் குழு:** திரு. கே. ஏ. டீ. பீ. சரத் சந்திர
ஓய்வு பெற்ற பணிப்பாளர்.
திருமதி. எஸ். ஆர். ரம்புக்வல்ல, சிரேட்ட விரிவுரையாளர்
முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும், ஆரம்பக் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.
திருமதி. டீ. எம். டபிள்யூ. முனசிங்ஹ,
ஓய்வு பெற்ற பேராசிரியர்
இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்.

**கலைத்திட்டக் குழு:** திருமதி. எஸ். ஆர். ரம்புக்வல்ல, சிரேட்ட விரிவுரையாளர்
திருமதி. எஸ். எஸ். சந்தமாலி தேசப்பிரய, சிரேட்ட விரிவுரையாளர்
செல்வி. ஜே, ஏ. நிர்மலா தமயந்தி ஜயசிங்ஹ,
சிரேட்ட விரிவுரையாளர்.
திருமதி. எச். ஜீ. வனசேக்கர, உதவி விரிவுரையாளர்.
திருமதி. கே. ஆர். எம். எஸ். ரணசிங்ஹ,
உதவி விரிவுரையாளர்.
திருமதி. எம். எஸ். எஸ். பிரனாந்து, உதவி விரிவுரையாளர்.
திரு. கே. டீ. என். களுபோவில, உதவி விரிவுரையாளர்.(இணைப்பில்)
திரு.கே. மகேந்திரன், உதவி விரிவுரையாளர்.(இணைப்பில்)

**மொழிச் செவ்விதாக்கம் :** திரு. எஸ் உதயசந்திரன்
பணிப்பாளர்(ஓய்வு), தமிழ்மொழித் துறை
தேசிய கல்வி நிறுவகம்

## வளப் பங்களிப்பு (2016)

- **ஆலோசனைகள் வழங்கலும் வழிநடத்தலும்:**
  - திரு. சுனில் ஹெட்டி ஆரச்சி, செயலாளர் கல்வி அமைச்சு
  - கலாநிதி (திருமதி) ரீ. ஏ. ஆர். ஜே. குணசேகர
    பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
  - திரு. எஸ். யூ. விஜேரத்ன,
    மேலதிக செயலாளர். (கொள்கை திட்டமிடல், செயலாற்றுகை மீளாய்வு)
  - கலாநிதி . வண. மாம்புள்கொட சுமனரதன தேரர்
    பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்.
- ஆலோசனை:
  பேராசிரியர் திருமதி. ஜீ. டீ. லேகம்கே,
  கல்விப் பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்.
- தொழினுட்பக் குழு:
  - கலாநிதி. திருமதி. எல். சீ. கொத்தலாவன,
    முன்னையநாள் பேராசிரியர், இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்.
  - கலாநிதி (திருமதி) சந்த்ரா குணவர்தன.
    முன்னையநாள் தகைசார் பேராசிரியர்,
    இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்.
  - வைத்தியர் திரு. நீர் தனகல
    சமுதாய வைத்திய ஆலோசகர், குடும்ப சுகாதாரப் பணிமனை.
  - வைத்தியர் திருமதி. சமன்மலீ சுமனசேன
    சிரேட்ட விரிவுரையாளர், மருத்துவ பீடம், ராகமை.
  - திரு. கே. ஏ. டீ. பீ. சரத் சந்த்ர
    முன்னைய நாள் பணிப்பாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி,
    ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
  - கலாநிதி. திருமதி. அனோமா ஆரியரத்ன,
    தலைவர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை,
    இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்.
  - திருமதி. டீ. எம். டபிள்யூ. முனசிங்ஹ,
    சிரேட்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை,
    இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்.
  - கலாநிதி. திருமதி. கே. ஏ. சீ. அல்விஸ்,
    சிரேட்ட விரிவுரையாளர், கல்வப் பீடம், இலங்கைத் திறந்த பல்கலைக் கழகம்.
  - திருமதி. பி. பீ. விதானகே,
    பணிப்பாளர், அனைவர்க்கும் கல்விக் கிளை, கல்வி அமைச்சு.
  - திருமதி. பீ. எஸ். ஏ. எஸ். பண்டித்தசேக்கர,
    பணிப்பாளர், ஆரம்பக் கல்வித் துறை, கல்வி அமைச்சு.

- வளவாளர் பங்களிப்பு:
    - திரு. எம். ஏ. ஜீ. டபிள்யூ. குலரத்ன,
      பணிப்பாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை,
      தேசிய கல்வி நிறுவகம்.
    - திரு. டபிள்யூ. ஜீ. எஸ். குமார,
      சிரேட்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
    - திரு. சுரனிமல லேகம்கே,
      முன்னைய நாள் பணிப்பாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
    - திருமதி. எஸ். லலிதாம்பிகை,
      உதவிக் கல்விப் பணிப்பாளர், ஆரம்பக் கல்விக் கிளை, கல்வி அமைச்சு.
    - திரு. ஏ. டீ. லியனகே,
      உதவிக் கல்விப் பணிப்பாளர், அனைவருக்கும் கல்விக் கிளை, கல்வி அமைச்சு.
    - திருமதி. ஆர் எம். பீ. டீ. ரத்னாயக்க
      உதவிக் கல்விப் பணிப்பாளர், அனைவருக்கும் கல்விக் கிளை, கல்வி அமைச்சு.
    - திருமதி. டபிள்யூ. லலிதா,
      உதவிக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்வி அலுவலகம், ஹொரணை.
    - திரு. சந்தன பண்டார சமரக்கோன், சித்திரக்கலை ஆசிரியர்.

- செயற்பாடுகள் செவ்விதாக்கம்:
    - திருமதி. ஆர். எம். கே. த. சில்வா
      பணிப்பாளர்
      முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை
      தேசிய கல்வி நிறுவகம்.
    - திரு. வி. என். எஸ். உதயசந்திரன்,
      பணிப்பாளர்(ஓய்வு), தமிழ் மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
    - திரு. டபிள்யூ. ஜீ. எஸ். குமார,
      சிரேட்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
    - திருமதி. எஸ். ஆர். ரம்புக்வல்ல, சிரேட்ட விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
    - திருமதி. எஸ். எம். சந்தமாலீ தேசப்பிரிய,
      விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.
    - திருமதி. ரீ. சீ. பீரிஸ்
      விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

- செல்வி. கே. ஏ. நிர்மலா தமயந்தி ஜயசிங்ஹ
  விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை,
  தேசிய கல்வி நிறுவகம்.
- திருமதி, எச். ஜீ. வனசேகர,
  உதவி விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை,
  தேசிய கல்வி நிறுவகம்.
- திருமதி, கே. ரே. எம். எஸ். ரணசிங்ஹ
  உதவி விரிவுரையாளர், முன்பிள்ளைப்பருவ விருத்தி, ஆரம்பக் கல்வித் துறை,
  தேசிய கல்வி நிறுவகம்.

# தரம் ஒன்றிக்கு உள்வாங்கப்படும் பிள்ளைகளை இனங்காணல்

## 1.0 அறிமுகம்

1988 ஆம் ஆண்டில் இந்திய நாட்டுப் பேராசிரியர், ஜோசெப் நாகி அவர்களது தலைமையில் தேசிய கல்வி நிறுவக முன்பிள்ளைப்பருவ விருத்தி மற்றும், ஆரம்பத் துறையின் ஒத்துழைப்புடன், ஆரம்பப் பாடசாலையில் சேரும் பிள்ளைகளின் பிரவேசத் தேர்ச்சிகள் தொடர்பான ஆய்வொன்று நடத்தப்பட்டது. அவ்வாய்வின் கண்டறிக்கைகளின்படி, 1998 ஆம் ஆண்டு ஆரம்பக் கல்வி மறுசீரமைப்புகளின் போது பிள்ளையை பிள்ளையை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டம் முதன்முதலாக நடைமுறைக்கு வந்தது. 2007 ஆம் 2016 ஆம் ஆண்டுக் கலைத்திட்ட மறுசீரமைப்புக்களின் போது அந்நிகழ்ச்சித்திட்டம் சில பல திருத்தங்களுடன் முன்வைக்கப்பட்டது. 2025 இல் தரம் ஒன்றிற்குப் பிரவேசிக்கவுள்ள பிள்ளைகளுடன் நடத்தப்பட்ட கையாண்டு பார்த்தல்களின் பெறுபேறாக, அமையப்பெறுவதுடன் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ளவும் கற்பித்தலை மேம்படுத்திக் கொள்ளவும் இந்த நிகழ்ச்சி திட்டம் துணையாகின்றது. பிள்ளையை இனங்காண்பதற்கான திருத்தியமைத்து இற்றைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் இங்கு முன்வைக்கப்படுகிறது.

பாடசாலைக் கல்விக்கு மகிழ்ச்சிகரமான ஆரம்பம் எனும் இந்நிகழ்ச்சித்திட்டத்தை அறிமுகம் செய்வதன் அடிப்படை நோக்கம், முன்பள்ளியிலிருந்து பாடசாலைக்கு இடம்மாறும் போது பிள்ளையிடம் நிகழ வேண்டிய மாற்றங்களை இலகுபடுத்தவும், பிள்ளைகளிடம் எந்தளவு அடிப்படை அனுமதித் திறன்கள் விருத்தியடைந்துள்ளது என அறிந்துகொள்ள ஆசிரியர்களுக்கும் பெற்றோர்களுக்கும் ஒத்துழைப்பதற்குமாகும். மேலும். இதன் மூலம் தரம் ஒன்றில் புதிதாக சேர்ந்து கொள்ளும் பிள்ளைகளின் ஆற்றல் மற்றும் ஆற்றலின்மைகளினதும் இயல்புகளை இனங்காண்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவதுடன். அதன் மூலம் வகுப்பறையின் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை எளிதாக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. எவ்வாறாயினும் இச்செயன்முறையினூடாக வெளிப்படுகின்ற பிள்ளைகளின் திறன்கள் உரிய வயதிலுள்ள வேறு பிள்ளைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு பயன்படுத்தக் கூடாதென்பதை உறுதியாக நினைவிற் கொள்ள வேண்டும். இச்செயற்பாடுகளின் பெறுபேறுகளை தரம் ஒன்றில் நாளாந்த கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளுடன் இணைக்க வேண்டும் என்பதனுடன், இதன் மொத்த விளைவுகளை பிள்ளைகளின் ஒட்டுமொத்த விருத்தியையும் இலக்காகக் கொண்ட செயற்பாட்டுடன் தொடர்புபடுத்துவது ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

## 2.0 பாடசாலைக்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளை இனங்காண வேண்டியதன் அவசியம் யாது?

பாடசாலைக்கு அனுமதிக்கப்படும் பிள்ளைகளின் வாழ்வில் அது ஒரு முக்கிய நிகழ்வாகும். பிள்ளைகள் பிரவேசிக்கின்ற பாடசாலைச் சூழல் புதியதாகும். அவர்கள் பழகிய மூத்தோர், ஆசிரியர்கள், நண்பர்கள் எவரும் அங்கில்லை. பழக்கமற்ற இப்புதிய சூழலலில் அவர்கள் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும்.

அதன் காரணமாக அவர்களில் விரக்தியோ, பதகளிப்போ ஏற்படக்கூடும். இத்தகைய பாதகமான அனுபவங்கள் அவர்களது முன்னேற்றத்திற்கு தடையாக அமையும். இச்செயற்பாட்டினூடாக மிகவும் இலகுவான சில செயற்பாடுகளை முன்வைத்து தரம் 1இல் பிரவேசிக்கின்ற பிள்ளைகளுக்கு பாடசாலைச் சூழலுடனும், ஆசிரியர்களுடனும், மற்றைய பிள்ளைகளுடனும் தொடர்பாடி செயற்படவும் விருப்பமான, மகிழ்ச்சிகரமான அனுபவங்களை வழங்குவதற்கான சந்தர்ப்பங்களை அமைத்துக் கொடுப்பதற்கும் முயற்சிக்கப்படுகின்றது. இவற்றின் மூலம் பாடாசாலைக் கல்விக்கான மகிழ்ச்சிகரமான ஆரம்பமொன்றை அமைத்துக் கொடுக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறே, தரம் ஒன்றிற்கான பொறுப்பாசிரியருக்கும் புதிய பிள்ளைகள் குழுவொன்றுடன் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது சவாலான செயற்பாடாகும். தமது வகுப்பிற்கு புதிதாக வரும் பிள்ளைகள் யார்? அவர்களது தேவைகள், விருப்பு வெறுப்புக்கள் யாவை? அவர்களது இயலுமைகள் எவை? தமது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளை முறையாக திட்டமிட்டுக் கொள்வதற்கு பிள்ளைகள் தொடர்பான அடிப்படை தரவுகளை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தலும் இச்செயன்முறையால் எதிர்பார்க்கும் மற்றொரு நோக்கமாகும்.

முன்பள்ளிகளுக்குச் சென்ற பிள்ளைகளும், எந்த ஒரு முன்பள்ளிக்கும் செல்லாத பிள்ளைகளும், நகர்ப்புற, கிராமப்புற சூழல்களைச் சேர்ந்த பிள்ளைகளும், வசதியான, வசதி குறைந்த குடும்பங்களிலிருந்து வரும் பிள்ளகளும் ஒரே பாடசாலையில் தரம் 1 இல் உள்வாங்கப்படுகின்றனர். இவ்வாறு பல்வேறு சூழல்களிலிருந்து வருகின்ற பிள்ளைகள் மத்தியில் பல்வேறு வேறுபாடுகளைக் காண முடியும். அவ்வேறுபாடுகளை விளங்கிக் கொண்டு அவற்றிக்கு பொருத்தமான நடவடிக்கை எடுத்து பொதுவான ஒரே கலைத்திட்டத்தைக் கற்க பிள்ளைகளை வழிப்படுத்துவது ஆசிரியர்களின் பொறுப்பாகும். இச்செயன்முறையில் மேற்படி பணியை எளிதாக்க சந்தரப்பம் வழங்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 3.0 பிள்ளைகளை இனங்காண்பதற்காகப் பாடசாலை ஆயத்தமாக வேண்டிய விதம்

- இந்நிகழ்ச்சித்திட்டம் அதிபரது தலைமையின் கீழ் திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டும்.
- தரம் ஒன்று / முதன்மை நிலை ஒன்றின் ஆசிரியர்கள் தமது பாடசாலை அதிபருடனும், பாடசாலை நிருவாகத்துடனும் கலந்துரையாடி, இந்நிகழ்ச்சித்திட்டத்தை, திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும்.
- பாடசாலையில் எவ்வாறான ஆயத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும் என்பதை இனங்காண்பதற்காகப் பயன்படுத்தத்தக்க பத்திரமொன்று தரப்பட்டுள்ளது. (இணைப்பு - 1)

- தரம் ஒன்றில் சேர்த்துக் கொள்வதற்கு தகுதி பெற்றுள்ள பிள்ளைகள் தொடர்பான தகவல்களை நேரகாலத்துடன் பெற்று நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களைச் செய்து கொள்ள வேண்டும்.
- முறைசார் பாடசாலையில் தரம் ஒன்றில் கற்றல் நடவடிக்கைகளை ஆரம்பிக்க முன்னர் இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.
- இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் பற்றியும், நடவடிக்கைகள் பற்றியும் பெற்றாருக்கு அறிவூட்டம் செய்து, இங்கு தரப்பட்டுள்ள ஆலோசனைகளின்படி, நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- அதிபரின் / ஆரம்பப் பிரிவு அதிபரின் மேற்பார்வையின் கீழ் பாடசாலையினது உள்வாரி மேற்பார்வையின் ஒரு பகுதியாக இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- இது மாணவரது மட்டங்களைத் தீர்மானிக்கும் ஒரு சோதனை அன்று. இது மாணவரை ஒருவரோடுவொருவராக ஒப்பிடும் ஒரு நிகழ்ச்சித் திட்டம் எனும் கருத்து பிள்ளைகளிடமோ பெற்றோரிடமோ ஏற்படாத வகையில் இந்நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது அவசியமாகும்.
- இதனை, ஆசிரியரின் தொடர்ச்சியான செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் பிள்ளைகளின் பல்வகைமைக்கு ஏற்ப கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கி அவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குவதற்கும் தீர்வுகள் காண்பதற்கும் மாத்திரமே பயன்படுத்த வேண்டும். மாறாக எதிர்கால கற்றலுக்கான ஆயத்தம் தொடர்பில் நடத்தப்படும், பிள்ளைகளை முதற்கட்டத்தில் இனங்காணல் தொடர்பான விளக்கத்தை எக்காரணம் கொண்டும் பகிரங்கப்படுத்தக் கூடாது.

## 4.0 ஆசிரியர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

- பிள்ளைகள் பல்வகைப்பட்டவர்கள் என்பதையும், அவர்களிடத்தே வெவ்வேறு வகையான ஆற்றல்கள் உண்டு என்பதையும், அப்பல்வகைமையையும் ஆற்றல்களையும் வகுப்பறையில், சாதகமான செயலூக்கத்துடன் செயற்படத்தக்க சூழலை உருவாக்கும் என்பதை ஆசிரியர் விளங்கிக் கொள்ள வேண்டும்.
- தரம் ஒன்றிற்கு பிரவேசிக்கும் பிள்ளைகளின் பல்வகைமை பற்றிய விளக்கத்தைப் பெறுவதற்காக, ஆசிரியருக்கு இருக்கும் வாய்ப்புக்களை விரிவுபடுத்துதல் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாதலால் நிகழ்ச்சித் திட்டத்தினை ஆரம்பம் முதல் இறுதி வரை வகுப்பாசிரியர் நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.
- மாணவர்க்கு சுயாதீனமாக, எளிதாகச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் போதுமான கால அவகாசம் வழங்கியவாறு இந்நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டும். ஒட்டுமொத்த நிகழ்ச்சிதிட்டத்துக்காகக் குறைந்த பட்சம் இரண்டு வாரமாவது பயன்படுத்துவது பொருத்தமானது.
- இந்நிகழ்ச்சித்திட்டத்தை, களிப்பூட்டத்தக்க சந்தர்ப்பங்களை உருவாக்கியவாறு, பிள்ளைகளுடன் நெருக்கமாகச் செயற்படத்தக்க ஒரு வாய்ப்பாக அமைத்துக் கொள்ளல் வேண்டும்.
- பிள்ளைகளுடன் சிறு குழுக்களாகச் செயற்படும் சந்தர்ப்பங்களில் தேவைக்கேற்ப

மற்றுமோர் ஆசிரியரின் உதவியைப் பெறலாம். குறிப்பாக, தரம் ஒன்றின் வகுப்புப் பொறுப்பாசிரியர் மாணவர் குழுவொன்றுடன் இந்நிகழ்ச்சித்திட்டத்துக்குரிய ஒரு செயற்பாட்டை நடைமுறைப்படுத்தும் போது ஏனைய மாணவர்களை பிறிதொரு செயற்பாட்டில் (இந்நிகழ்ச்சித்திட்டத்தில் அடங்கியிராத) ஈடுபடுத்துவதற்காக, மற்றுமொரு ஆசிரியரின் / ஆசிரிய உதவியாளரின் உதவி தேவைப்படும்.

- பாடசாலைச் சமூகத்துக்கு ஏற்புடையதாக சௌகரியமான உடையணிந்து இந்நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்ற இடமளித்தலானது பிள்ளைகளுக்கு செயற்பாடுகளில் ஈடுபட வசதியாக அமையும்.
- பிள்ளைகளை அடையாளம் காண்பதை இலகுபடுத்திக் கொள்வதற்காக அவர் அவரது பெயர் எழுதிய அட்டைகள் தயாரித்து அவற்றை அணிவியுங்கள்.
- பிள்ளைகளுடன் செயற்பாடுகளில் ஈடுபடும் வேளைகளில் அவர்களது பாதுகாப்பு தொடர்பாகக் கவனஞ் செலுத்துங்கள்.
- செயற்பாடுகளுக்காக மிக எளிதாகச் சூழலிருந்து பெறத்தக்க பொருட்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது.
- குறிப்பாக “விளையாட்டு முற்றத்தை” தற்காலிகமாக, எனினும் மாணவரது மனங்கவரத் தக்க விதத்தில் அமைத்துக் கொள்வது அவசியமாவதோடு, அதிக செலவு செய்து கூடாரங்கள் போன்றவை அமைப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

## 5.0 செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்வதற்கும் நடைமுறைப்படுத்துவதற்குமான அறிவுறுத்தல்கள்

- தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளைகளை 10 பேர் கொண்ட குழுக்களாக்குங்கள். அவ்வொவ்வொரு குழுவும் (10 பேர் வீதம் கொண்ட) 10 செயற்பாடுகளையும் பூர்த்தி செய்தல் வேண்டும். தேவைப்படும் சந்தர்ப்பங்களில் சிறிய குழுக்களைப் பயன்படுத்துவது பொருத்தமானது. தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவானதாயின் அதற்கேற்ப ஒரு குழுவில் அடங்கும் பிள்ளைகள் எத்தனை பேர் எனத் தீர்மானித்துக்கொள்ளல் வேண்டும்.
- “விளையாட்டு வீட்டில் விளையாடுவோம்” எனும் செயற்பாடே பிள்ளைகளுடன் முதலாவதாகச் செய்ய வேண்டிய செயற்பாடாவதோடு அதற்காகப் போதுமான அளவு நேரத்தைப் பயன்படுத்துவது பொருத்தமானது.
- “களிப்புறுவோம்” எனும் செயற்பாட்டை உங்களது வகுப்பில் உள்ள எல்லாப் பிள்ளைகளுடனும் ஒரே நாளில் செய்து முடிக்கும் ஒரு செயற்பாடாக நடைமுறைப் படுத்துதல் பொருத்தமானது.
- ஏனைய செயற்பாடுகள் நடைமுறைப்படுத்துவதற்காக திட்டவட்டமான ஒழுங்கு முறையொன்று கிடையாது. அதற்காகப் பின்பற்றத்தக்க மாதிரித் திட்டமொன்று அடுத்த பக்கத்தில் தரப்பட்டுள்ளது.
- செயற்பாடுகளைக் கவனமாக வாசித்து விளங்கிய பின்னர் அவற்றை மாணவருடன் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## 6.0 பிள்ளைகள் தொடர்பான அறிக்கைகளைப் பதிவு செய்தல்

- செயற்பாடுகள் தொடர்பில் பிள்ளைகள் காட்டும் திறன்களைப் பின்வரும் மட்டங்களின் கீழ் அறிக்கைப்படுத்த வேண்டும்.
  - ✓ திருப்தியானது
  - ● விருத்தியடைதல் வேண்டும்.
- கணிப்பீட்டின் போது சரி( ) அடையாளம், குற்று( ) அடையாளம் பெற்ற எல்லாப் பிள்ளைகள் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தி, அவர் அவருக்கு பொருத்தமானவாறு கற்றல்- கற்பித்தற் செயன்முறையைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

## 7.0 செயற்பாடுகளுடன் தொடர்புடைய பரப்புக்கள்

| பரப்பு | செயற்பாடு |
|---|---|
| இயக்கத் திறன்கள் | • ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம்<br>• காகித்தாள் உருண்டைகள் செய்வோம் ஓட்டுவோம்<br>• வெட்டி ஒட்டுவோம்<br>• பூக்கள் செய்வோம். |
| அறிகைத் திறன்கள் | • பகுதிகளைப் பொருத்துவோம்<br>• நிறங்களை கோலங்களை இனங்காண்போம் |
| சமூகத் திறன்கள் | • விளையாட்டு வீட்டில் விளையாடுவோம் |
| மொழி அறிவுத் திறன்கள் | • சம்பவமொன்றை / கதையொன்றை உருவாக்குவோம் |
| களிப்புறு திறன்கள் | • மகிழ்ந்திருப்போம் |
| சுய நல்வாழ்வு, நற்பழக்கங்கள், கற்றல் சார்ந்த திறன்கள் | • நற்பழக்கங்கள், நல்வாழ்வு கற்றலின்பால் கவனஞ் செலுத்துவோம். |

- தரம் ஒன்றில் புதிதாகச் சேரும் பிள்ளைகள், ஆரம்பக் கல்விப் பாடசாலைக்கு எந்த அளவு ஆயத்தமாக உள்ளனர் என்பதை இனங்காண்பதற்கு நீங்கள் துணையாகக் கொள்ளத்தக்க 10 செயற்பாடுகள் தரப்பட்டுள்ளன. அச்செயற்பாடுகள் பிரதானமாக 6 பரப்புகளுடன் தொடர்புடையவையாகும். செயற்பாடுகளையும் அவை சார்ந்த பரப்புக்களையும் பின்வருமாறாகத் திரட்டி முன்வைக்கலாம்.

## 8.0 செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான மாதிரித் திட்டம்

<table>
<tr><th>முதலாம் நாள்</th><th>இரண்டாம் நாள்</th><th>மூன்றாம் நாள்</th><th>நான்காம் நாள்</th></tr>
<tr><td rowspan="2">விளையாட்டு வீட்டில் விளையாடுவோம்.</td><td>• கோலங்கள் இனங் காண்போம்</td><td>• பகுதிகளைப் பொருத்துவோம்</td><td rowspan="4">• மகிழ்ந்திருப்போம்</td></tr>
<tr><td>• ஓடுவோம் பாய்வோம் ஏறுவோம்</td><td rowspan="3">• சம்பவமொன்றை/ கதையொன்றை உருவாக்குவோம்</td></tr>
<tr><td>காகிதத்தாளில் உருண்டைகள் செய்வோம்/ ஒட்டுவோம்.</td><td rowspan="2">• வெட்டி ஒட்டுவோம்</td></tr>
<tr><td>பூக்களை உருவாக்குவோம்.</td></tr>
</table>

மேற்படி உத்தேச திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது முதலாவது செயற்பாடு, இறுதிச் செயற்பாடு ஆகிய இரண்டு தவிர்ந்த ஏனைய செயற்பாடுகளைச் செய்வதற்காகத் திட்டவட்டமாக ஒழுங்கேதும் கிடையாது என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.

## 9.0 செயற்பாடுகள்

பிள்ளைகளை இனங்காண்பதற்காகத் தயாரிக்கப்பட்ட செயற்பாடுகள் கீழே தரப்பட்டுள்ளன. இச் செயற்பாடுகளை முன்னாய்ந்து கூறும் களிப்பூட்டத்தக்கவாறான சந்தர்ப்பங்களை உள்ளடக்கியும் பிள்ளைகளுடன் நெருக்கமாகச் செயற்படத்தக்க சந்தர்ப்பங்களாக அமைத்துக் கொள்வது அவசியமாகும்.

## செயற்பாடுகளை நடத்துவதற்கான ஆலோசனைகள்

- இங்கு தரப்பட்டுள்ள ஒவ்வொரு செயற்பாட்டையும் நடத்தும் போது பிள்ளைகளுக்குப் போதுமான கால அவகாசம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு செயற்பாட்டிலும் ஆரம்பத்திலிருந்து முடிவுரையில் பிள்ளைகளின் தொழிற்பாட்டையும் நடத்தையும் இடையறாது அவதானியுங்கள். செயற்பாடுகளை விரைவாகச் செய்து முடிக்குமாறு பிள்ளைகளைத் தூண்டுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில். பிள்ளைகளிடத்தே இதுவரையில் விருத்தியடைந்துள்ள, அந்தந்த பராமரிப்புக்குரிய திறன் மட்டங்களை இனங்காண்பது மாத்திரமே இந்நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.
- பிள்ளைகளை ஒருவரோடு ஒருவரை ஒப்பிடுவதைத் தவிர்த்து, தரப்பட்டுள்ள நியதிகளின்படி கணிப்பீட்டை நடத்துங்கள்.
- இங்கு தரப்பட்டுள்ள அந்தந்தச் செயற்பாட்டில் ஈடுபடும் பிள்ளைகளை அவதானித்து அச்சந்தர்ப்பங்களில் அவதானிப்புப் பதிவுப் பத்திரத்தில் உரிய நியதிகளின்படி, பதிவு செய்து கொள்ளுங்கள்.
- பிள்ளைகளைத் தனித்தனியே கணிப்பீடு செய்யும் செயற்பாடுகளின் போது, மற்றுமோர் ஆசிரியர் உதவியைப் பெற்று ஏனைய பிள்ளைகளை பொறுப்புள்ள வகையிலான யாதேனுமொன்றில் ஈடுபடுத்த ஆவண செய்யுங்கள்.

# 1. விளையாட்டு வீட்டில் விளையாடுவோம்

| பரப்பு | சமூகத்திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | விளையாட்டு வீட்டில் விளையாடுவோம் |
| கணிப்பீட்டு நியதிகள் | • ஏனைய மாணவருடன் நட்புடன் உரையாடுவார்<br>• ஏனைய மாணவருடன் ஒத்துழைத்துச் செயற்படுவார்.<br>• ஏனைய மாணவர்க்கு விருப்புடன் உதவி செய்வார்.<br>• ஏனைய மாணவருடன் பொருள்களைப் பரிமாறிக் கொள்வார். |
| தேவையான பொருள்கள் | • தண்ணீர் பேசின்கள், தகரப் பேணிகள், பிளாத்திக்குப் பாத்திரங்கள், பிளாத்திக்குப் போத்தல்கள், புனல்கள், கரண்டிகள், சிறிய பொம்மைகள், பழைய உடைகள் (சுத்தமான), வெறும் முகப்பவுடர் பெட்டிகள், உறைகள், தொப்பிகள், சிறிய தலையணைகள், ஏணை (சேலைத் தொட்டில்), சிறிய மட்பாத்திரங்கள், சிரட்டைகள், மணல், பல்வேறு விளையாட்டுப் பொருள்கள், களி, பலகைத்துண்டுகள், மெழுகுச்சீலை, மாக்களி உருண்டைகள், சிறிய மரக்குச்சிகள், பலகைச் சில்லுகள், பிளாத்திக்குப் பந்துகள், டீன்ஸ் குற்றிகள், சிறிய தகர மூடிகள், பற்பசை ரியூப் மூடிகள், மண், தேங்காய்ப்பூ, உண்மையான பூக்கள். ஈர்க்குகள், பலா இலைகள், மணல் இட்ட தகரப் பேணிகள் போன்ற உங்களது பிரதேசத்தில் இலகுவாகப் பெறத்தக்க மாணவரின் பயன்பாட்டுக்குக்குப் பொருத்தமான பொருள்கள்.<br><br>• விளையாட்டு வீட்டில் விளையாடுவதற்காக, பல வகைப் பொருள்கள் இருப்பது நல்லது. ஆசிரியர் தனது வசதிக்கேற்ப வசதியான வழிகளில் பொருள்களைச் சேகரித்துக் கொள்ளலாம். எனினும் "பிள்ளைகளை இனங்காணும் நிகழ்ச்சித்திட்டத்தில்" பங்கேற்றும் மாணவர்களூடாகவோ அவர்களது பெற்றார் - பாதுகாவலர் ஊடாகவோ அவற்றைப் தருவித்துக்கொள்ளல் அதாவது செயற்பாடுகளின் போது பிள்ளைகள், அப்பொருள்களுக்குச் சொந்தம் கொண்டாடும் நிலையை இதன் மூலம் தவிர்த்துக் கொள்ளலாம். |

| | |
|---|---|
| முன்னாயத்தம் | • ஆசிரியர் இலகுவாக அவதானிக்கத்தக்க வகையிலும், அழைக்கும் பிள்ளைகளின் எண்ணிக்கைக்குப் போதுமான அளவு இடவசதி இருக்கும் வகையிலும் விளையாட்டு வீடுகள் அமைத்துக் கொள்ளுங்கள். சூழலில் காணப்படும் வளங்களைப் பயன்படுத்தி, தற்காலிக விளையாட்டு வீடுகளை குறைந்த செலவில் தயாரித்துக் கொள்ளுங்கள்.<br>• சேகரித்த பொருள்களை ஒவ்வொரு குழுவுக்கும் சமமான அளவுகளிலும், போதுமான அளவிலும் கிடைக்கும் வகையில் எல்லா விளையாட்டு வீடுகளிலும் வையுங்கள். |
| இடம் | • விளையாட்டு வீடு. |

**முறையியல்**

**படிமுறை: i**

- விளையாட்டு வீட்டில் வைக்கப்பட்டுள்ள பொருள்களை / உபகரணங்களைப் பயன்படுத்தி, தாம் விரும்பியவாறு, விளையாட, மாணவர்க்கு சந்தர்ப்பமளியுங்கள். மாணவரது திறன்களை இனங்காணத்தக்க வகையில், தேவையானவாறு மாணவரை ஊக்கப் படுத்துவதில் ஆசிரியர் கவனஞ் செலுத்துதல் வேண்டும்.

**ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:**

- ஏனைய மாணவருடன் நட்புடன் உரையாடுகின்றாரா?
- ஏனைய மாணவருடன் ஒத்துழைத்துச் செயற்படுகின்றாரா?
- ஏனைய மாணவர்க்கு விருப்புடன் உதவி செய்கின்றாரா?
- ஏனைய மாணவருடன் பொருள்களைப் பரிமாறிக் கொள்கின்றாரா?

## 2. காகிதத்தாள்களைக் கசக்கி உருண்டைகளாக்குவோம், ஒட்டுவோம்.

| பரப்பு | இயக்கத்திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | காகிதத் காகிதத்தாள்களைக் கசக்கி உருண்டைகளாக்குதல், ஒட்டுதல். |
| கணிப்பீட்டு நியதிகள் | • காகிதத்தாள் ஒன்றினை சிறுசிறு துண்டுகளாகக் கிழிப்பார்.<br>• கிழித்த காகிதத்தாள் துண்டுகளைக் கசக்கி உருண்டைகளாக்குவார்.<br>• தரப்பட்ட உருவத்தின் ஓரங்களின் வழியே காகித உருண்டைகளை ஒட்டுவார்.<br>• உருவத்தில் பூர்த்தி/நேர்த்தி குறித்துக் கவனஞ் செலுத்துவார். |
| தேவையான பொருள்கள் | காகிதக் கீலங்களைக் கசக்கி உருண்டையாக்கி இடுவதற்குப் பிளாத்திக்குத் தட்டுக்கள், வெண்ணிற திசூத்தாள்கள், பசை, எளிமையான வடிவங்கள் (வட்டம், சதுரம் ... போன்ற எளிமையான வடிவங்கள்) வரையப்பட்ட $A_4$ அளவு வர்ணத் தாள்கள். |
| முன்னாயத்தம் | • 30 சென்ரி மீற்றர் நீள அகலமுள்ள, திசூத்தாள்களை மாணவரது எண்ணிக்கைக்கு ஏற்ப தேடிப் பெறுங்கள். (ஆளுக்கு ஒன்று வீதம்)<br>• தேவையான ஏனைய பொருள்களையும் தேடிப்பெறுங்கள். |
| இடம் | • வகுப்பறை |

### முறையியல்

**படிமுறை: i**

- மாணவர் ஒவ்வொருவருக்கும், எளிமையான வடிவமொன்று (12cm அளவு விட்டமுள்ள ஒரு வட்டம் / 12cm நீள அகலமுள்ள ஒரு சதுரம் ...) வரையப்பட்ட $A_4$ அளவு வர்ணக் காகிதத்தாள் ஒன்று, பசை, வெண்ணிற திசுத்தாள் ஒன்று ஆகியவற்றை வழங்குங்கள்.
- திசுத்தாளைச் சிறுசிறு துண்டுகளாக கிழிக்குமாறும், கிழித்த துண்டுகளை கசக்கி உருண்டைகளாக்குமாறும் அறிவுறுத்துங்கள்.
- திசுத்தாள் உருண்டைகளை பிளாத்திக்குத் தட்டில் இடுமாறு அறிவுறுத்துங்கள்.

- தரப்பட்ட வடிவத்தின் ஓரங்கள் வழியே, திசுத்தாள் உருண்டைகளை ஒட்டுமாறு கூறுங்கள்.
- இதற்காக போதுமான அளவு நேரத்தை மாணவர்க்கு வழங்குங்கள்.
- மாணவரது ஆக்கங்களை அவதானித்துப் பாராட்டுங்கள்.

**ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:**


- திசுத்தாளை சிறுசிறு துண்டுகளாகக் கிழிக்க முடிகிறதா?
- கிழித்த திசுத்தாள் துண்டுகளைக் கசக்கி, சிறிய உருண்டைகள் செய்கின்றனரா?
- ஆக்கிய உருண்டைகளை தரப்பட்ட வடிவத்தின் ஓரங்களின் வழியே ஒட்ட முடிகின்றதா?
- வடிவத்தைச் சுற்றிவர பூரணமாக திசுத்தாள் உருண்டைகள் ஒட்டுகின்றாரா?

## 3.0 மலர்கள் செய்வோம்

| பரப்பு | இயக்கத் திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | மலர்கள் செய்தல் |
| கணிப்பீட்டு நியதிகள் | • காகிதத்தாளில் நீளப்பாடாக ஒரு பகுதியை மடிப்பார்.<br>• தாளை குறுக்குப்பாடாக வைத்து, சிறுசிறு கீலங்கள் கிழிப்பார்.<br>• சிறிய கீலங்களாகுமாறு கிழித்த காகிதத்தாளைச் சேர்த்து மலரொன்று செய்வார். |
| தேவையான பொருள்கள் | • $A_4$ அளவுள்ள, இலகுவாகக் கிழிக்கத்தக்க காகிதத்தாள்கள். |
| முன்னாயத்தம் | அழைத்த மாணவர்களைப் பொருத்தமானவாறு அமருமாறு வழிப்படுத்துங்கள். ஆளுக்கு ஒன்றாகக் காகித்தாள்கள் வழங்குங்கள்.<br>• தேவையான ஏனைய பொருள்களையும் தேடிப்பெறுங்கள். |
| இடம் | • வகுப்பறை |

### முறையியல்

#### படிமுறை: i




- மேலே தரப்பட்டுள்ள படத்தில் காட்டடியுள்ளவாறாக $A_4$ அளவுள்ள காகிதத்தாளின் நீளப்பாடாக 5 சென்றி மீற்றர் பகுதியை மடியுங்கள்.
- காகிதத்தாளை மேசை மீது வைத்து சிறுசிறு கீலங்கள் கிழிக்குமாறு வழிப்படுத்துங்கள். (**A, B** கோடு வரையில்)
- கிழிப்பதற்காக கோடுகள் வரைந்து கொடுத்தலாகாது.

#### படிமுறை: ii

- கிழித்த பகுதிக்குக் கீழே மீதியாக உள்ள பகுதியை (மடித்த) பிடித்து ஒரு மலர் போன்று சேர்க்குமாறு அறிவுறுத்துங்கள்.

#### படிமுறை: iii

- மாணவர் ஆக்கிய மலர்கள் எல்லாவற்றையும் சேகரித்து, அழகான மலர்த்தட்டொன்றை அமைத்து காட்சிப்படுத்துங்கள். (இதனை ஆசிரியரே செய்தல் வேண்டும்)

### ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:

- காகிதத்தாளில் நீளப்பாடாக ஒரு பகுதியை மடிக்க முடிந்ததா?
- காகிதத்தாளில் அகலப்பாடாக சிறுசிறு கீலங்கள் கிழிக்க முடிந்ததா?
- கீலங்களாகக் கிழித்த காகிதத்தாளைச் சேர்த்து ஒரு மலர் போன்று ஆக்க முடிந்ததா?

### குறிப்பு:

மாணவரின் நுண்ணியக்கத் திறன்களை இனங்காண்பதே "மலர்கள் செய்வோம்" செயற்பாட்டின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஓர் உதாரணத்துக்காகவே இச்செயற்பாடு தரப்பட்டுள்ளது. மாணவரது நுண்ணியக்கத்திறன்களை இனங்காண்பதற்குப் பொருத்தமான வேறு செயற்பாட்டைப் பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

## 4.0 வர்ணங்களையும் கோலங்களையும் இனங்காண்போம்.


| பரப்பு | அறிகைத் திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | வர்ணங்களையும் கோலங்களையும் இனங்காணல் |
| கணிப்பீட்டு நியதிகள் | • முதலாவது கோலத்துக்குப் பொருத்தமான அடுத்த உருவைச் சரியாகத் தெரிவு செய்வார்.<br>• முதலாவது கோலத்தைச் சரியாகப் பூர்த்தி செய்வார்.<br>• இரண்டாவது கோலத்துக்குப் பொருத்தமான அடுத்த உருவைச் சரியாகத் தெரிவு செய்வார்.<br>• இரண்டாவது கோலத்தைச் சரியாகப் பூர்த்தி செய்வார்.<br>• வர்ணங்களை / நிறங்களைச் சரியாக இனங்காண்பார். |
| தேவையான பொருள்கள் | • சமநீளமுள்ள ஈர்க்குகளில் குத்தப்பட்ட இரு வேறு நிறங்களிலான 7 மலர்கள் (உதாரணம் 4+3 ) ஒரே நிற நட்சத்திரங்கள் 4, சந்திரன்கள் 3 (உருக்களின் விட்டம் 10 சென்றிமீற்றர் மட்டில் இருப்பது நல்லது.)<br>(சிவப்பு, நீலம், மஞ்சள் போன்ற நிறங்களைப் பயன்படுத்துவது நல்லது)<br>• மணல் நிரம்பிய 6 தகரப் பேணிகள். |
| முன்னாயத்தம் | • வெட்டிய மலர்களையும் தாள்களையும் ஈர்க்குகளில் இணையுங்கள். வெண்ணிற அல்லது வேறு தனி நிறக் காகிதத்தாளினால் தகரப்பேணி மீது ஒட்டி மணல் நிரப்புங்கள்.<br>• மாணவர்கள் செயற்படும் இடத்தில், மாணவர் மேசைகள் இரண்டினை வையுங்கள். |
| இடம் | • வகுப்பறைக்கு வெளியே - கிட்டிய ஓர் இடம் |

### முறையியல்

**படிமுறை: i**

- கீழே உருவில் காட்டியுள்ளவாறாக, மணல் நிரப்பிய 5 தகரப்பேணிகளில் இரு வேறு நிற மலர்களைக் குத்தியும், ஒரு பேணியில் மலர் குத்தாமலும் மேசை மீது வரிசையாக வையுங்கள்.

முதலாவது கோலம்:



**படிமுறை: ii**

- ஈர்க்குகளில் குத்தப்பட்ட சிவப்புநிற, மஞ்சள் நிற மலர் ஒவ்வொன்று வீதம் மாணவரின் எதிரே வையுங்கள்.

**படிமுறை: iii**

- மாணவரை, வகுப்பறையில் அமர்ந்திருக்கச் செய்து, இச்செயற்பாட்டுக்காக ஒவ்வொருவராகக் குறித்த இடத்துக்கு அழையுங்கள்.
- வகுப்பறையில் தங்கியிருக்கும் மாணவரை பொருத்தமான ஒரு செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.


**படிமுறை: iv**

- ஒவ்வொரு மாணவருக்கும் தரப்பட்ட கோலத்தின்படி, பொருத்தமான மலர் குத்தப்பட்டுள்ள ஈர்க்கைத் தெரிவு செய்து அதனைக் கொண்டு சென்று மணல் நிரப்பி வைக்கப்பட்டுள்ள தகரப் பேணியில் குத்துமாறு அறிவுறுத்துங்கள்.
- உரு குத்தப்பட்டுள்ள ஈர்க்கை தகரப்பேணியில் குத்தி நிறுத்திய பின்னர், அவ்வுருக்களின் நிறங்கள் பற்றி வினவுங்கள்.
- அடுத்த பிள்ளையை அழைக்க முன்னர், இறுதியாகவுள்ள தகரப்பேணி குற்றிய உருவத்தை அப்புறப்படுத்திவிடுங்கள்.

**படிமுறை: v**

- தடவைக்கு ஒரு பிள்ளை வீதம் அழைத்து ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பம் கிடைக்கும் வகையில் செயற்பாட்டை நடத்துங்கள்.
- அவதானிப்புக்களை குறித்துக்கொள்ளுங்கள்.

### இரண்டாவது கோலம்



**படிமுறை: i**

- படத்தில் காட்டியுள்ளவாறாக பிறைச் சந்திரனும் நட்சத்திரமும் என்றவாறாக கோலத்தை மாற்றி முன்னர் போன்றே அமைந்த உருக்களை தகரப்பேணியில் குத்துங்கள்.

**படிமுறை: ii**

- மற்றைய இரண்டு உருக்களும் குத்தப்பட்ட இரண்டு ஈர்க்குகளையும் பிள்ளையின் எதிரே வையுங்கள். (இதற்காக ஒரே நிற வெவ்வேறு உருக்கள் இரண்டையும் பயன்படுத்தலாம்)
- முன்னர் போன்றே செயற்பாட்டைப் பூர்த்தி செய்யுங்கள். உரிய உரு குத்தப்பட்ட ஈர்க்கை தகரப் பேணியில் குத்திய பின்னர் அவ்வுருவங்களின் நிறங்கள் குறித்து வினவுங்கள்.
- அவதானிப்புக்களைக் குறித்துக் கொள்ளுங்கள்.

### ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:

- முதலாவது கோலத்திற்குரிய கோலத்தைச் சரியாக இனங்கண்டு அக்கோலத்தில் அடுத்ததாக வரவேண்டிய உருவைச் சரியாகத் தெரிவு செய்து உரிய தகரப் பேணியில் குத்துகின்றாரா?
- இரண்டாவது கோலத்திற்குரிய கோலத்தைச் சரியாக இனங்கண்டு, அக்கோலத்தில் அடுத்ததாக வரவேண்டிய உருவைச் சரியாகத் தெரிவு செய்து உரிய தகரப் பேணியில் குத்துகின்றாரா?
- முதலாம், இரண்டாம் கோலங்களில் பயன்படுத்தப்பட்ட உருக்களின் நிறங்களைச் சரியாகக் கூறுகின்றாரா?

## 5.0 ஓடுவோம், பாய்வோம், ஏறுவோம்

| பரப்பு | இயக்கத் திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | ஓடுதல், பாய்தல், ஏறுதல் |
| கணிப்பீட்டு நிய-திகள் | • சிறிது தூரம் ஓடுவார். (10 மீற்றர் மட்டில்)<br>• இரு பாதங்களையும் அருகருகே வைத்து சிறிது தூரம் முன்னோக்கிப் பாய்வார்.<br>• ஏறும் சட்டகத்தில் ஏறி இறங்குவார்.<br>• சமநிலைக் கோலின் மீது ஓர் அந்தத்திலிருந்து மறு அந்தம் வரை நடந்து செல்வார்.<br>• விளையாட்டு முற்றத்தில் உள்ள உபகரணங்களை ஒத்துழைத்துப் பயன்படுத்துவார்.<br>• விளையாட்டு முற்ற உபகரணப் பயன்பாட்டின் போது தமக்குரிய தருணம் வரும் வரை காத்திருப்பார்.<br>• விளையாட்டு முற்ற உபகரணங்களைப் பாதுகாப்பாக கையாள்வார். |
| தேவையான பொருள்கள் | • விளையாட்டு முற்ற உபரணங்கள் |
| முன்னாயத்தம் | • விளையாட்டு முற்றத்தில் அங்குள்ள உபகரணங்களும் மாணவரது பயன்பாட்டுக்குப் பொருத்தமான பாதுகாப்பான நிலையில் உள்ளனவா என்பதை, மாணவரைச் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முன்னர் அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.<br>• ஆசிரியரால் ஏககாலத்தில் அவதானிக்கத்தக்க எண்ணிக்கை யிலான மாணவர்களைச் செயற்பாட்டுக்கு ஆயத்தமாக்குங்கள்.<br>• விளையாட்டு முற்றத்தில் மாணவர்கள் கழிக்கும் நேரம் முழுவதிலும் ஆசிரியர் அவர்களை அவதானிப்பது அவசியமாகும். |
| இடம் | • விளையாட்டு முற்றம் |

### முறையியல்

**படிமுறை: i**

- மாணவர் குழுவை விளையாட்டு முற்றத்துக்கு அழைத்துச் செல்லுங்கள்.
- மாணவரது விருப்பத்தின்படி, விளையாட்டு முற்ற உபகரணங்களைக் கொண்டு விளையாட வழிப்படுத்துங்கள்.
- மாணவர் ஒவ்வொருவரும் விளையாட்டு முற்றத்தில் உள்ள ஒவ்வோர் உபகரணத்தையும் பயன்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
- யாதேனும் உபகரணத்தையும் பயன்படுத்த விரும்பாத மாணவர்கள் உள்ளனராயின் அவர்களைப் பலவந்தப்படுத்துவதைத் தவிர்ததுக் கொள்ளுங்கள்.

**படிமுறை: ii**

- மாணவர்கள் வெவ்வேறு உபகரணங்களுடன் விளையாடும் வேளைகளில் ஆசிரியர் அவர்களை, கூர்ந்து அவதானித்து அது தொடர்பான குறிப்புகளைப் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
- மாணவருக்கு சிறிது தூரம் ஓட முடியுமா என்பதை அவதானிப்பதற்காக 10 மீற்றர் மட்டிலான தூரத்தை அடையாளமிட்டுக் கொள்ளுங்கள். உங்களால் தெளிவாக அவதானிக்கத்தக்க தொகை மாணவர்களை, ஓர் அந்தத்தில் நிற்கச் செய்து அடையாளமிடப்பட்டுள்ள இடம் வரை ஓடிச் செல்ல வழிப்படுத்துங்கள்.
- தடவைக்கு ஒரு மாணவர் வீதம் எதிரே அழைத்து, சிறிது தூரம் பாய முடியுமா என்பதை சோதித்துப் பாருங்கள்.

**ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:**

- சிறிது தூரம் ஓட முடியுமா? (10 மீற்றர் மட்டில்)
- பாதகங்களை அருகருகே வைத்து ஒரு எட்டில் சிறிது தூரம் முன்னோக்கிப் பாய முடியுமா?
- ஏறும் சட்டகத்தில் ஏறவும், இறங்கவும் முடியுமா?
- சமனிலைக்கோலின் ஓர் அந்தத்தில் இருந்து மறு அந்தம் வரை நடந்து செல்ல முடியுமா?
- விளையாட்டு முற்ற உபகரணங்களை, ஒத்துழைத்துப் பயன்படுத்துகிறாரா?
- விளையாட்டு முற்ற உபகரணங்களைப் பயன்பாட்டின் போது தமக்குரிய தருணம் வரும் வரை காத்திருக்கிறாரா?
- விளையாட்டு முற்ற உபகரணங்களைப் பாதுகாப்பான வகையில் பயன்படுத்துகிறாரா?

# 6.0 வெட்டி ஒட்டுவோம்

| பரப்பு | இயக்கத் திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | வெட்டி ஒட்டுதல் |
| கணிப்பீட்டு நியதிகள | • தரப்பட்ட எல்லையின் உள்ளே நிறந்தீட்டுவார்.<br>• காகிதத்தாளையும் கத்தரிக்கோலையும் சரியாகப் பற்றிப் பிடிப்பார்.<br>• தரப்பட்ட எல்லையின் வழியே வெட்டுவார்.<br>• வெட்டியெடுத்த வடிவத்தை / உருவத்தை மற்றுமொரு காகிதத்தாளின் மீது ஒட்டுவார். |
| தேவையான பொருள்கள் | • விட்டம் 10 சென்ரிமீற்றர், மட்டிலான ஒரு வட்டம் வரையப்பட்டு $\mathbf{A}_4$ அளவுள்ள வெண்ணிறக் காகிதத்தாள்கள்<br>• பஸ்ரல் வர்ணம், பசை, கத்தரிக்கோல்கள் |
| முன்னாயத்தம் | • கத்தரிக்கோல்கள், பசை $\mathbf{A}_4$ அளவுள்ள வெண்ணிறக் காகிதத்தாள்கள். இவற்றை மாணவரின் எண்ணிக்கைக்குப் போதுமான அளவில் திரட்டிக் கொள்ளுங்கள். |
| இடம் | • வகுப்பறை |

**முறையியல்**

**படிமுறை: i**

- வகுப்பறையில் ஒருவருக்கு ஒருவர் ஓரளவு இடைவெளி விட்டு அமருமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

**படிமுறை: ii**

- விட்டம் 10 சென்ரிமீற்றர் மட்டிலான வட்டம் வரையப்பட்ட வெண்ணிற $\mathbf{A}_4$ காகிதத்தாள் ஒவ்வொன்று வீதம் மாணவர்க்கு வழங்குங்கள்.

**படிமுறை: iii**

- தமக்கு தரப்பட்ட காகித்தாளில் உள்ள வட்டத்தினுள் நிறந்தீட்டி, அவ்விடத்தின் எல்லை வழியே கத்தரிக்கோலால் வெட்டச் சந்தர்ப்பமளியுங்கள். (காகிதத் தாளைப் பிடித்திருக்கும் விதத்தையும் வடிவத்தின் எல்லை வழியே வெட்டுகின்றனரா என்பதையும் அவதானியுங்கள்) செயற்பாட்டைச் செய்து காட்டுவதையும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

**படிமுறை: iv**

- வெட்டியெடுத்த (வட்ட) வடிவத்தை ஒட்டுவதற்காக, மேலுமொரு $\mathbf{A}_4$ அளவுள்ள வெண்ணிறக் காகிதத்தாள் வீதம் ஒவ்வொருவருக்கும் வழங்குங்கள்.

**படிமுறை: v**

- வெட்டியெடுத்த (வட்ட) வடிவத்தை தரப்பட்ட வெள்ளைக் காகிதத்தாளின் மீது ஒட்டுமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

### ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:

- தரப்பட்ட எல்லையினுள் பூரணமாக நிறந் தீட்டுகிறாரா?
- கத்தரிக்கோலை சரியாகப் பற்றிப் பிடிக்கின்றாரா?
- கத்தரிக்கோலைப் பயன்படுத்தி, தரப்பட்ட, எல்லையின் வழியே (வட்ட) வடிவத்தை வெட்டுகிறாரா?
- வெட்டியெடுத்த வடிவத்தை, தரப்பட்ட காகிதத்தாளின் மீது ஒட்டுகிறாரா?

## 7.0 பகுதிகளைப் பொருத்துவோம்

| பரப்பு | அறிகைத் திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | பகுதிகளைப் பொருத்துதல் |
| கணிப்பீட்டு நியதிகள் | • இரண்டு பகுதிகளாக வெட்டப்பட்ட உருவத்தைப் பொருத்திப் பூரணப்படுத்துவார்.<br>• இரண்டு பகுதிகளாக வெட்டப்பட்ட உருவத்தைச் சரியாக ஓர் உருவமாகப் பூரணப்படுத்துவார். |
| தேவையான பொருள்கள் | • எளிய பழப் படமொன்றினை இரண்டாக வெட்டிப் பெற்ற துண்டுகள் இரண்டு |
| முன்னாயத்தம் | • எளிய பழப்படமொன்றினை இரண்டாக வெட்டி துண்டுகளைப் பெறுங்கள். |
| இடம் | • வகுப்பறை |

### முறையியல்

**படிமுறை: i**

- மாணவரை ஒவ்வொருவராக அழைத்து, பழப்படத் துண்டுகள் இரண்டையும் கொடுங்கள்.
- பழத்துண்டுகளிரண்டையும் சரியாகப் பொருத்துமாக மாணவரிடம் கூறுங்கள்.

**படிமுறை: ii**

- மாணவர் பகுதிகள் இரண்டையும் பொருத்திய பின்னர், உருவத்தை இனங்கண்டு பெயரிடுவதற்கு சந்தர்ப்பமளியுங்கள்.

### ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:

- இரண்டு பகுதிகளாக வெட்டப்பட்ட பழப் படத்தை சரியாக தனி உருவமாகப் பொருத்திப் பூரணப்படுத்துகிறாரா?
- பூர்த்தி செய்த உருவம் / படத்தில் இருப்பது யாது எனக் கூறுகின்றாரா?

# 8.0 கதையொன்று உருவாக்குதல்

| பரப்பு | மொழித் திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | கதையொன்று உருவாக்குதல் / கட்டியெழுப்புதல் |
| கணிப்பீட்டு நியதிகள் | • தரப்பட்ட பட அட்டையில் உள்ள உருக்களைப் பெயரிடுவார்.<br>• சம்பவங்களைத் தழுவி, பொருத்தமான கதையொன்று முன்வைப்பார்.<br>• கதையின் தாம் விரும்பிய ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரம் மூலம் முன்வைப்பார். |
| தேவையான பொருள்கள் | • கதையொன்றை உருவாக்குவதற்குப் பொருத்தமானவையாக சில சம்பவங்களை உள்ளடக்கிய அட்டையொன்று<br>• பட வாசிப்புக்குப் பொருத்தமான கதைப்புத்தகமொன்று |
| முன்னாயத்தம் | • கதையொன்றை உருவாக்குவதற்குப் பொருத்தமான சில சம்பவங்கைள உள்ளடக்கிய அட்டையொன்று தயாரித்துக் கொள்ளுங்கள்.<br>• மாணவரின் படவாசிப்புக்குப் பொருத்தமானவையான சில கதைப்புத்தகங்களைத் தேடிப்பெறுங்கள். |
| இடம் | • வகுப்பறை |

## முறையியல்

**படிமுறை: i**

- ஒரே கதையின் சந்தர்ப்பங்கள் சிலவற்றைக் காட்டும் விதமான பட அட்டை ஒன்றைத் தயார் செய்து கொள்ளுங்கள். (இந்த உருவில் உள்ளவற்றை ஆக்கபூர்வமாக மாணவர்களின் மட்டத்திற்குப் பொருத்தமானவாறும் தயாரித்துக் கொள்ளலாம்.) இது தொடர்பான விள்க்க செயற்பாடுகள் கீழ் உள்ள QR அதனை பயன்படுத்தி செயற்பாடுகளை செய்வதற்கு உதவுங்கள்.

Channel NIE

- தடவைக்கு ஒருவர் வீதம் மாணவர்களை ஆசிரியர் மேசையின் அருகே அழைத்து, தரப்பட்ட பட அட்டையை அவதானிக்குமாறு அறிவுறுத்துங்கள். அப்பட அட்டையில் உள்ள பொருள்கள் சிலவற்றை / உருவங்கள் சிலவற்றைப் பெயரிடுமாறு கூறுங்கள்.

- அப்பட அட்டையில் உள்ள சம்பவங்களைக் கொண்டு தமது விருப்பப்படி கதையொன்றை உருவாக்க மாணவருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- தேடிப்பெற்ற கதைப்புத்தகங்களை மற்றைய மாணவர்க்கு வழங்குங்கள். அவற்றை, சுயாதீனமாக ஒருவருக்கு ஒருவர் பரிமாறியவாறு அவற்றில் அடங்கியுள்ள படங்களை வாசிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

**படிமுறை: ii**

- கதையின் தாம் விரும்பிய ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரமாக வரைய மாணவர்க்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

### ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:

- பட அட்டையில் உள்ள உருவங்களைப் பெயரிடுகிறாரா? (குறைந்த பட்சம் 5 உருவங்களையேனும் பெயரிடுதல் வேண்டும்)
- பட அட்டையில் உள்ள படங்களைக் கொண்டு கதையொன்றை உருவாக்குகின்றாரா?
- சம்பவங்களை தொடர்புபடுத்தாது, அட்டையில் உள்ள உருவங்களை மாத்திரம் பெயரிடுகின்றாரா?
- அட்டையில் உள்ள சம்பவங்களைக் கொண்டு கதையொன்றை உருவாக்கி முன்வைக்கின்றாரா?

**குறிப்பு**

அந்தந்த மாணவர் கூறும் கதையை ஏனைய மாணவர்கள் செவிமடுக்க முடியாதவாறு சூழலைத் தயார்ப்படுத்தி, இச்செயற்பாட்டை நடத்துங்கள்.

## 9.0 மகிழ்வுறுவோம்

இது மாணவர்க்காக, இறுதித்தினத்தன்று நடைமுறைப்படுத்துவதற்குப் பொருத்தமான ஒரு செயற்பாடாகும். இச்செயற்பாட்டில் வகுப்பு மாணவர்கள் அனைவரையும் ஈடுபடுத்துதல் வேண்டும்.

இந் நிகழ்ச்சித் திட்டத்துக்காக, குழுவாக அழைத்த எல்லா மாணவர்களையும் இத்தினத்தில் ஏக காலத்தில் அழைத்தல் வேண்டும்.

| பரப்பு | களிப்புறு திறன்கள் |
|---|---|
| செயற்பாடு | கூட்டாக மகிழ்ந்திருத்தல் |
| கணிப்பீட்டு நியதிகள் | • வகுப்பின் எதிரே தனியாக, தாம் விரும்பிய முன்வைப் பொன்றினைச் செய்வார். (பாடல்/கவிதை)<br>• ஏனைய மாணவருடன் கூட்டாக பாடலில் ஈடுபடுவார். |
| தேவையான பொருள்கள் | • மேடையை அலங்கரிப்பதற்குத் தேவையான பொருள்கள்.ஒலி வாங்கி (mic) ஒன்று அல்லது ஒலிவாங்கி மாதிரியொன்று ... |
| முன்னாயத்தம் | • வகுப்பறையின் ஒரு பக்கத்தில் / மூலையில் அல்லது இடவசதியுள்ள ஓர் இடத்தில் அழகான மேடையொன்றை அமைத்துக் கொள்ளுங்கள்.<br>• முன்வைப்புக்குத் தேவையான உபகரணங்கள் (உதாரணம்: ஒலி வாங்கி (mic) அல்லது ஒலிவாங்கி மாதிரியொன்றைப் பெற்றுக் கொள்ளுங்கள். |
| இடம் | • வகுப்பறையில் அல்லது திறந்த வெளியான ஓர் இடத்தில் அமைக்கப்பட்ட அழகிய மேடை. |

### முறையியல்

**படிமுறை: i**

- மேடை மீது ஏறி, தாம் விரும்பிய பாடலொன்றை முன்வைப்பதற்காக மாணவர் ஒவ்வொருவருக்கும் சந்தர்ப்பமளியுங்கள்.
- தாம் விரும்பியவாறு அங்க அசைவுகளைக் வெளிக்காட்டுமாறு மாணவர்க்கு ஆர்வ மூட்டுங்கள்.

**படிமுறை: ii**

- தானே முன்வந்து தன்னம்பிக்கையுடன் மேடை மேலேறி முன்வைக்கும் மாணவர்களை இனங்காணுங்கள்.

**படிமுறை: iii**

- உதவி தேவைப்படும் மாணவர்கள் உள்ளனராயின், அவர்களுக்கு உதவுமாறு ஏனைய மாணவர்க்கு ஆர்வமூட்டுங்கள்.

**ஆசிரியர் அவதானிக்க வேண்டியவை:**

- ஏனைய மாணவருடன் கூட்டாக பாடுவதில் ஈடுபடுகின்றாரா?
- வகுப்பின் எதிரே பாடலை சுயவிருப்புடன் முன்வைக்கின்றாரா? (பாடல் / கவிதை)

## 10. சுக வாழ்விலும் கற்றலிலும் கவனஞ் செலுத்துவோம்

ஒவ்வொரு செயற்பாட்டின் போதும் ஆசிரியர் ஒவ்வொரு மாணவரையும் அவதானித்து குறிப்புகள் எழுதிக் கொள்ள வேண்டும். கீழே தரப்பட்டுள்ள திறன்கள் தொடர்பான நடத்தைகளை அவதானிக்கும் போது மாணவரின் அந்நடத்தைகளை உள்ளவாறாகவே அவதானித்தல் வேண்டும். மாறாக அவற்றை மாற்றியமைக்கும் வகையில் ஆசிரியர் தலையிடலாகாது.

| பரப்பு | சுகவாழ்வுத் திறன்களும் கற்றல் திறன்களும் |
|---|---|
| செயற்பாடு | சுகவாழ்விலும் கற்றலிலும் கவனஞ் செலுத்துவோம் |
| கணிப்பீட்டு நியதிகள் | சுக வாழ்வும் நற்பழக்கங்களும் (i)<br>• ஒரு பழக்கமாக, உணவு உட்கொள்ள முன்னரும் உணவு உட்கொண்ட பின்னரும், சவர்க்காரமிட்டு சரியாகக் கை களைக் கழுவுவார்.<br>• ஏனையோரின் உதவி இன்றி உணவு உட்கொள்வார்.<br>• உண்ணும் போதும் பருகும் போதும் உணவையோ நீரையோ சிந்தமாட்டார்.<br>• சுத்தம் பேணுவார். (முகம், தலை, நகங்கள், பாதங்கள் / கால்கள்)<br>• உடைகளின் சுத்தத்தைப் பேணுவார்.<br>• மரியாதையான நடத்தைகளை வெளிக்காட்டுவார். (Good morning, வணக்கம், நன்றி ... என்றவாறாக)<br>• தமது தாமதங்கள் / தப்பிதங்களின் போது மன்னிப்புப் கோருவார்.<br>கற்றல் சார்ந்த திறன்கள் (ii)<br>• செயற்பாடுகளின் போது பயன்படுத்திய பொருள்களை ஒழுங்காக வைப்பார்.<br>• தொடங்கிய செயற்பாட்டை முடிவு வரையில் செய்வார்.<br>• கவனமாகவும், ஆர்வத்துடனும் செயற்பாடுகளில் இணைந்து கொள்வார்.<br>• செயற்பாடுகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியான நடத்தைகளை வெளிப்படுத்துவார். |
| இடம் | • வகுப்பறையில் அல்லது திறந்த வெளியான ஓர் இடத்தில் அமைந்த மேடை |

இத்திறன்களை அவதானிப்பதற்கும், அறிக்கைப்படுத்துவதற்குமாக விசேட செயற்பாடுகள் அமைக்கப்படவில்லை. பாடசாலை தொடர்பில் பிள்ளையின் ஆயத்தத்தை இனங்காண்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நான்கு நாட்களுள் இத்திறன்களை அவதானித்து இனங்காண்பது எதிர்பார்க்கப்படுகிறது.

**குறிப்பு**

பின்வரும் நடத்தைகளைக் காட்டும் பிள்ளைகள் குறித்து கூடுதல் கவனஞ் செலுத்தி, கற்றல் / கற்பித்தற் செயற்முறையின் போது தேவையான தலையீடு களைச் செய்தல் வேண்டும்.

1. தாமாக மலசலகூடத்தைப் பயன்படுத்த முடியாத பிள்ளைகள்
2. தாமாக உணவு உட்கொள்ள முடியாத பிள்ளைகள்
3. தலைமயிர், நகங்கள், உடைகள் அழுக்கான பிள்ளைகள்

அவதானிப்புக்களைப் பதிவு செய்தல்
√ திருப்திகரமானது
● விருத்தியடைதல் வேண்டும்

| | | | மாணவர் பெயர் | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| அறிகைத்திறன்கள் | நிறங்களை கோலங்களை இனங்கணண்போம் | முதலாவது கோலத்துக்குப் பொருத்தமான அடுத்த உருவைச் சரியாகத் தெரிவு செய்வார். | | | | | |
| | | முதலாவது கோலத்தைச் சரியாகப் பூர்த்தி செய்வார். | | | | | |
| | | இரண்டாவது கோலத்துக்குப் பொருத்தமான அடுத்த உருவைச் சரியாகத் தெரிவு செய்வார். | | | | | |
| | | இரண்டாவது கோலத்தைச் சரியாகப் பூர்த்தி செய்வார். | | | | | |
| | | வர்ணங்களை / நிறங்களைச் சரியாக இனங்காண்பார். | | | | | |
| | பகுதிகளைப் பொருத்துவோம் | இரண்டு பகுதிகளாக வெட்டப்பட்ட உருவத்தைப் பொருத்திப் பூரணப்படுத்துவார். | | | | | |
| | | இரண்டு பகுதிகளாக வெட்டப்பட்ட உருவத்தைச் சரியாக ஓர் உருவமாகப் பூரணப்படுத்துவார். | | | | | |
| இயக்கத் திறன்கள் | பூக்கள் செய்வோம். | காகிதத்தாளில் நீளப்பாடாக ஒரு பகுதியை மடிப்பார். | | | | | |
| | | தாளை குறுக்குப்பாடாக வைத்து, சிறுசிறு கீலங்கள் கிழிப்பார். | | | | | |
| | | சிறிய கீலங்களாகுமாறு கிழித்த காகிதத்தாளைச் சேர்த்து மலரொன்று செய்வார். | | | | | |
| | காகித்தாள் உருண்டைகள் செய்வோம் ஒட்டுவோம | காகிதத்தாள் ஒன்றினை சிறுசிறு துண்டுகளாகக் கிழிப்பார் | | | | | |
| | | கிழித்த காகிதத்தாள் துண்டுகளைக் கசக்கி உருண்டை களாக்குவார். | | | | | |
| | | தரப்பட்ட உருவத்தின் ஓரங்களின் வழியே காகித உருண்டைகளை ஒட்டுவார். | | | | | |
| | | உருவத்தில் பூர்த்தி / நேர்த்தி குறித்துக் கவனஞ் செலுத்துவார். | | | | | |
| | வெட்டி ஒட்டுவோம் | தரப்பட்ட எல்லையின் உள்ளே நிறந்தீட்டுவார். | | | | | |
| | | கத்தரிக்கோலை சரியாகப் பற்றிப் பிடிப்பார். | | | | | |
| | | தரப்பட்ட எல்லையின் வழியே வெட்டுவார். | | | | | |
| | | வெட்டியெடுத்த வடிவத்தை / உருவத்தை மற்றுமொரு காகிதத்தாளின் மீது ஒட்டுவார். | | | | | |
| | ஓட்டுவோம், பாய்வோம், ஏறுவோம் | சிறிது தூரம் ஓடுவார். (10 மீற்றர் மட்டில்) | | | | | |
| | | இரு பாதங்களையும் அருகருகே வைத்து சிறிது தூரம் முன்னோக்கிப் பாய்வார். | | | | | |
| | | ஏறும் பட்சத்தில் ஏறி இறங்குவார். | | | | | |
| | | சமனிலைக் கோலின் மீது ஓர் அந்தத்திலிருந்து மறு அந்தம் வரை நடந்து செல்வார். | | | | | |
| | | விளையாட்டு முற்றத்தில் உள்ள உபகரணங்களை ஒத்துழைத்துப் பயன்படுத்துவார். | | | | | |
| | | விளையாட்டு முற்ற உபகரணப் பயன்பாட்டின் போது தமக்குரிய தருணம் வரும் வரை காத்திருப்பார். | | | | | |
| | | விளையாட்டு முற்ற உபகரணங்களைப் பாதுகாப்பாக கையாள்வார். | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| சமூகத் திறன்கள் | விளையாட்டு வீட்டில் விளையாடுவோம் | ஏனைய மாணவருடன் நட்புடன் உரையாடுவார். | | | | | |
| | | ஏனைய மாணவருடன் ஒத்துழைத்துச் செயற்படுவார். | | | | | |
| | | ஏனைய மாணவர்க்கு விருப்புடன் உதவி செய்வார். | | | | | |
| | | ஏனைய மாணவருடன் பொருள்களைப் பரிமாறிக் கொள்வார். | | | | | |
| சுய நல்வாழ்வு, நற்பழக்கங்கள், கற்றல் சார்ந்த திறன்கள் | கற்றலின்பால் கவனஞ் செலுத்துவோம். | ஒரு பழக்கமாக, உணவு உட்கொள்ள முன்னரும் உணவு உட்கொண்ட பின்னரும், சவர்க்காரமிட்டு சரியாகக் கை களைக் கழுவுவார். | | | | | |
| | | ஏனையோரின் உதவி இன்றி உணவு உட்கொள்வார். | | | | | |
| | | உண்ணும் போதும் பருகும் போதும் உணவையோ நீரையோ சிந்தமாட்டார். | | | | | |
| | | சுத்தம் பேணுவார். (முகம், தலை, நகங்கள், பாதங்கள் / கால்கள்) | | | | | |
| | | உடைகளின் சுத்தத்தைப் பேணுவார். | | | | | |
| | | மரியாதையான நடத்தைகளை வெளிக் காட்டுவார். (Good morning, வணக்கம், நன்றி ... என்றவாறாக) | | | | | |
| | | தமது தாமதங்கள் / தப்பிதங்களின் போது மன்னிப்புப் கோருவார். | | | | | |
| | நல்வாழ்வு, நற் பழக்கங்கள் | செயற்பாடுகளின் போது பயன்படுத்திய பொருள்களை ஒழுங்காக வைப்பார். | | | | | |
| | | தொடங்கிய செயற்பாட்டை முடிவு வரையில் செய்வார். | | | | | |
| | | கவனமாகவும், ஆர்வத்துடனும் செயற்பாடு களுடன் இணைந்து கொள்வார். | | | | | |
| | | செயற்பாடுகளில் ஈடுபட்டு மகிழ்ச்சியான நடத்தைகளை வெளிப்படுத்துவார். | | | | | |
| களிப்புறு திறன்கள் | மகிழ்ந்திருப் போம் | வகுப்பின் எதிரே தனியாக, தாம் விரும்பிய முன்வைப்பொன்றினைச் செய்வார். | | | | | |
| | | ஏனைய மாணவருடன் கூட்டாக பாடலில் ஈடுபடுவார். | | | | | |
| மொழி அறிவுத் திறன்கள் | சம்பவமொன்றை/ கதை யொன்றை உருவா-க்குவோம் | தரப்பட்ட பட அட்டையில் உள்ள உருக்களைப் பெயரிடுவார். | | | | | |
| | | சம்பவங்களைத் தழுவி, பொருத்தமான கதையொன்றை முன்வைப்பார். | | | | | |
| | | கதையின் தாம் விரும்பிய ஒரு சந்தர்ப்பத்தைச் சித்திரம் மூலம் முன்வைப்பார். | | | | | |

# பிள்ளையின் பின்னணித் தகவல்கள்
## (தேவையற்ற பகுதிகளைக் கீறி விடுக.)

ஒரு பிள்ளைக்கு ஒரு படிவம் வீதம் பூர்த்தி செய்க.

1. பிள்ளையின் பெயர் : ....................................................................................
2. 01.01.2026 அன்று வயது: .......... வருடங்கள் ....... மாதங்கள் ..... நாட்கள் .......
3. ஆண் / பெண் : ...............
4. இனம் / சிங்களவர் / தமிழர் / முஸ்லிம் / பிற
5. சமயம் :
6. (அ) பிள்ளை முன்பள்ளிக் கல்வி பெற்றுள்ளாரா? ஆம் / இல்லை
   (ஆ) முன்பள்ளிக் கல்வி பெற்ற வருடங்கள் எத்தனை: 02 / 01
7. பிள்ளையின் வளர்ச்சி:
   (அ) ஆரோக்கிய நிலை: நல்லது / சாதாரணமானது / பலவீனமானது
   (ஆ) சுறுசுறுப்பு : நல்லது / சாதாரணமானது / பலவீனமானது
   (இ) உயரம் : ................. சென்ரிமீற்றர்
   (ஈ) நிறை : ................. கிலோகிராம்
8. பிள்ளையினது குடும்பப் பின்னணி பற்றிய தகவல்கள்:
   (அ) பிள்ளை, பெற்றாருடன்/தாயுடன்/தந்தையுடன்/பாதுகாவலருடன் வாழ்கிறார்.
   (ஆ) குடும்பத்துக்கு நிரந்தர வருமானம் உண்டு / இல்லை.
   (இ) குடும்பத்துக்கு வாழ வீடொன்று உள்ளது / இல்லை.
   (ஈ) குடும்பத்தில் உள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கை: .............
   (உ) தாயின் கல்வி மட்டம் : ........
   (ஊ) தந்தையின் கல்வி மட்டம் : ........
9. (அ) தந்தை / தாய் / பாதுகாவலர் பெயர் : ............................................................
   (ஆ) வீட்டு முகவரி: .........................................................................................
   (இ) தொலைபேசி இலக்கம் : .....................................

ஆசிரியரின் பெயர் : .............................................

கையொப்பம்: .............................................

## இணைப்பு: 1

## பிள்ளையை இனங்காணும் நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பாடசாலையின் ஆயத்தம்

## பாடசாலையின் ஆயத்தம்: அதிபரின் கவனத்திற்கு

| ஆயத்தத்திற்குரிய அம்சங்கள் | ஆம் | இல்லை | மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
|---|---|---|---|
| 01. தரம் ஒன்றுக்கான ஏனைய வகுப்பறைகளிலிருந்து வேறாக்கப்பட்டுள்ளது. | | | |
| 02. தரம் ஒன்று பிள்ளைகளின் பாதுகாப்பு உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. | | | |
| 03. தரம் ஒன்று வகுப்பறைச் சூழல் பிள்ளைகளுக்குக் களிப்பூட்டத்தக்கவாறு அமைக்கப்பட்டுள்ளது. | | | |
| 04. தரம் ஒன்று வகுப்பறையை பிள்ளைகள் இலகு வாக அணுகலாம் / சென்றடையலாம். | | | |
| 05. பாடசாலையில் பருகுவதற்கு குடி நீர் உள்ளது. | | | |
| 06. மாணவருக்குப் பொருத்தமாக, போதுமான நீர் வசதி கொண்ட மலசலகூடம் உண்டு. | | | |
| 07. வகுப்பறையிலிருந்து கழிவுகளை அப்புறப்படுத்தப் பொருத்தமான வேலைத்திட்டம் உண்டு. | | | |
| 08. பிள்ளைகளுக்காக உரிய போசாக்கு வேலைத் திட்டமொன்று நடைமுறையில் உள்ளது. | | | |
| 09. தரம் ஒன்றில் கற்பிப்பதற்கு அனுபவமிக்க, பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். | | | |
| 10. தரம் ஒன்றுக்காக நெகிழ்ச்சியான நேரசூசி நடைமுறைப்படுத்தப்படுகிறது. | | | |
| 11. தரம் ஒன்றுக்காகச் செயற்படும் பெற்றார் வட்டங்கள் அமைக்கப்பட்டுள்ளன. | | | |
| 12. தரம் ஒன்று பிள்ளைகளினது பெற்றாருடன் தகவல் பரிமாற்றத்துக்கான ஒரு முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. | | | |

அதிபர் கையொப்பம் :.................................... திகதி :....................................

**பகுதி: ii**

## வகுப்பறை ஆயத்தம்: ஆசிரியரின் கவனத்துக்கு

| ஆயத்தத்துக்குரிய அம்சங்கள் | ஆம் | இல்லை | மேம்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
|---|---|---|---|
| 1. காற்றோட்டமும் ஒளியும் திருப்திகரமான மட்டத்தில் உள்ளன. | | | |
| 2. கதிரைகள், மேசைகள் போதுமானவை, பிள்ளைகளின் வயதுக்குப் பொருத்தமானவை. | | | |
| 4. ஒவ்வொரு பிள்ளைக்கும் போதுமான இடவசதி வகுப்பறையில் உண்டு. | | | |
| 5. செயற்பட்டுக் கற்கும் அனுபவங்களைப் பெறுவதற் குப் பொருத்தமான கற்றற் சூழல் உண்டு. உதாரணம்: மணல் சார்ந்த செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குப் பொருத்தமான ஓர் இடம், புத்தகம் வாசிப்பதற்குரிய இடம், பிள்ளைகளின் ஆக்கங்களைக் காட்சிப்படுத்துவதற்குரிய இடம், வேலை மேசை ... போன்றவை. | | | |
| 6. வயதுக்குப் பொருத்தமான, போதுமான அளவு உபகரணங்கள் உள்ளன. | | | |
| 7. வயதுக்குப் பொருத்தமான, பாதுகாப்பான, பொருத்தமான உபகரணங்களைக் கொண்ட விளையாட்டு முற்றம் உண்டு. | | | |
| 8. கற்றல் சாதனங்களை / பொருள்களை அடுக்கி வைப்பதற்கான வசதி உண்டு. | | | |
| 9. செயற்பட்டுக் கற்றலுக்கான சூழலைக்கொண்ட உள்வாரி, வெளிவாரிச் சூழல் உண்டு. | | | |

## பிள்ளையை இனங்கண்ட பின்னர்

பிள்ளையை இனங்காண்பதற்குரிய கணிப்பீட்டு நியதிகளின்படி உங்களது அவதானிப்புகளின் பேரில், அந்தந்தப் பிள்ளை தொடர்பாக, குற்று (•), சரி (✓) அடையாளம் இடப்பட்டுள்ளது. சிற்சில நியதிகள் தொடர்பில் அடையாளம் இடப்பட்டுள்ளன. பிள்ளைகள் தொடர்பில் கவனஞ் செலுத்தி, கற்றல் / கற்பித்தற் செயன்முறையின் போது நீங்கள் விசேட கவனஞ் செலுத்துதல் வேண்டும். சிற்சில கணிப்பீட்டு நியதிகள் தொடர்பில் இடர்ப்பாடுகளைக்

காட்டிய பிள்ளைகளுக்காக கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது பொருத்தமானவாறு சந்தர்ப்பமளித்துச் செயற்பட முடியும்.

**உதாரணம் : 1**

## இயக்கத்திறன்கள் தொடர்பில் உதவி தேவைப்படும் பிள்ளைகள்:

சமநிலைக்கோலின் மீது நடந்து செல்லும் போது குற்று (•) அடையாளம் இட்ட பிள்ளைகளுக்கு, சரி (✓) அடையாளமிட்ட பிள்ளைகளின் செயற்பாட்டை அவதானிக்கச் சந்தர்ப்பமளித்து, குற்று அடையாளம் பெற்ற பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டி, அவர்களது திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காக வெவ்வேறு உத்திகளைக் கையாளலும் ஊக்கமளித்தலும்.

சமநிலையைப் பேணியவாறு செயற்படுவதற்காக, உதவி தேவைப்படும் பிள்ளைகளுக்கு சமநிலைக் கோலின் மீது நடந்து கொள்வதில் இடர்ப்படும் பிள்ளைகளுக்கு உதவுவதற்காக, விளையாட்டு முற்றத்தின் கீழ் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு மேலதிகமாக அவரை வித்துப்பை சார்ந்த கீழே தரப்பட்டுள்ள செயற்பாட்டையும் பயன்படுத்தலாம்.

1. அவரை வித்து உறையைத் தலை மீது வைத்துக்கொண்டு சிறிது தூரம் நடந்து செல்லுமாறு அறிவுறுத்துங்கள்.
2. வித்து உறையைத் தலை மீது வைத்தவாறு முன்னோக்கி நடத்தல், பின்னோக்கி நடத்தல், விரைவாக நடத்தல் என்றவாறாக மெய்ந்நிலைகளை மாற்றியவாறு நடந்து செல்ல வழிப்படுத்துங்கள்.
3. அவரை வித்து உறையைத் தலை மீது வைத்தவாறு சந்த அசைவுகளில் (rhythmic) ஈடுபடுமாறு வழிப்படுத்துங்கள்.
4. குறைவான உயரத்தில் வைக்கப்பட்ட அகலம் கூடிய பலகையொன்றின் மீது, அவரை வித்து உறையைத் தலை மீது வைத்தவாறு மற்றுமொருவரின் உதவியுடன் நடந்து செல்லுமாறு அறிவுறுத்துங்கள்.
5. “சைமன் கூறுகிறார்” “யானை போல செல்லுங்கள்”, “சைமன் கூறுகிறார்” “கைகளை உயர்த்துங்கள்” என்றவாறாக செயற்பாடுகளில் ஈடுபடுத்துங்கள்.

**உதாரணம் : 2**

## இயக்கத்திறன்கள்:

சமநிலைக்கோலின் மீது, ஓர் அந்தத்தில் இருந்து மற்றைய அந்தம் வரையில் நடந்து செல்வார். மேற்படி நியதி தொடர்பில் சரி (✓) அடையாளம் இடப்பட்ட பிள்ளைகளை அவதானித்தவாறு, குறித்த செயற்பாடுகளில் ஈடுபடுமாறு குற்று (•) அடையாளம் பெற்ற பிள்ளைகளுக்கு ஆர்வமூட்டுதல்

**உதாரணம் : 3**

## சமூகத் திறன்கள்:

ஏனைய பிள்ளைகளுடன் நட்புடன் உரையாடுவார். எனும் நியதிக்காக குற்று (•) அடையாளம் பெற்ற பிள்ளைகள் இருவர், சரி (✓) அடையாளம் பெற்ற பிள்ளைகள் இருவர் என்றவாறாக

நான்கு பிள்ளைகளை குழுக்களாக்கி அமர்த்தி, குற்று (•) அடையாளம் பெற்ற பிள்ளைகளின் சமூகத் திறன்களை விருத்தி செய்தல்.

**உதாரணம் : 4**

**அறிகைத்திறன்கள்:**

**நியதி:**

இரண்டாவது கோலத்துக்குப் பொருத்தமான அடுத்த உருவத்தைத் சரியாகத் தெரிவு செய்வார். மேற்படி நியதிக்காக சரி (✓) அடையாளம் பெற்ற ஒரு பிள்ளையையும் குற்று (•) அடையாளம் பெற்ற ஒரு பிள்ளையையும் சோடி சேர்த்து, பகுதிகளை இணைக்கும் செயற்பாட்டிலும், கோலத்தை இனங்காணும் செயற்பாட்டிலும் ஈடுபடச் சந்தர்ப்பம் வழங்குதல்.

**உதாரணம் : 5**

**மொழித்திறன்கள்:**

**நியதி:**

ஏனைய பிள்ளைகளுடன் பாடுவார். மேற்படி நியதிக்காக சரி (✓) அடையாளம் பெற்ற சில பிள்ளைகளையும் (•) அடையாளம் பெற்ற சில பிள்ளைகளையும் சேர்த்து வகுப்பில் பாடும் செயற்பாட்டுக்குச் சந்தர்ப்பமளித்தல்

இவ்வாறாக, ஆக்கபூர்வமாகவும் விளக்கத்துடனும் கற்றல் - கற்பித்தல் செயன்முறையின் போது சந்தர்ப்பங்களை உருவாக்குவதன் மூலம், பிள்ளைகளின் ஒட்டுமொத்த விருத்திக்குத் துணையாக அமைவதோடு, அது உங்களது கற்றல் - கற்பித்தற் பணியானது, இலகுவானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமையும்.

## தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளையை இனங்கண்ட பின்னர் ...

பிள்ளையை இனங்காணல் தொடர்பான விளையாட்டுக்களின் போது, விசேட தேவையுள்ள பிள்ளைகளையும் சந்திக்க வாய்ப்புண்டு.

பிள்ளைகளின் விசேட கல்வித் தேவைகளை இனங்காண்பதற்காக நீங்கள் பின்வருவது போன்ற ஓர் அவதானிப்புப் படிவத்தைப் பயன்படுத்தலாம்.

## அவதானிப்புப் பத்திரம் (மாதிரி)

**குறிப்பு:**

இங்கு தரப்பட்டுள்ள சுருக்கமான தகவல்களைக் கொண்டு, விரிவான அவதானிப்புப் பத்திரமொன்று தயாரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இனங்கண்ட தகவல்களை அப்பத்திரத்திலேயே பதிவு செய்தல் வேண்டும். இது ஒரு பூரணமான மாதிரிப்பத்திரம் அல்ல; மாறாக இது ஒரு வழிகாட்டல் மாத்திரமே.

## A அடிப்படைத் தகவல்கள்

பிள்ளையின் பெயர்: ...................................................................................................

ஆண் / பெண் : ...................................................................................................

பாடசாலையின் பெயரும் முகவரியும்: ......................................................................

அவதானித்த வகுப்பு : .........................

வகுப்புக்குப் பொறுப்பாசிரியரின் பெயர்: ....................................................................

அவதானித்த திகதியும் நேரமும்: ..........................................................................

## B அவதானித்த தகவல்கள்

பிள்ளை தொடர்பான பின்னணித் தகவல்கள்:

பிள்ளையின் நடத்தை தொடர்பாக: .........................................................................

இயக்கத் திறன்கள்: .......................................................................................

உபகரணப் பயன்பாடு: ......................................................................................

விசித்திரமான நடத்தைகள்: ...............................................................................

சமூகத் தொடர்புகள்: .......................................................................................

ஏனையோருடன் தொடர்பில் காட்டும் எதிர்வினைகள் : ...................................................

மொழித்திறன்கள் : ..................................................................

கட்புலக்காட்சி : ..................................................................

செவிப்புலக்காட்சி : ..................................................................

இயல்பான திறன்கள்: ..................................................................

பிற தகவல்கள் : ..................................................................

## C வைத்திய அறிக்கை மூலம் பெற்ற தகவல்கள்

......................................................................................................................................
......................................................................................................................................
......................................................................................................................................
......................................................................................................................................
......................................................................................................................................
......................................................................................................................................

## D வினவி அறிந்த தகவல்கள்

1. ஆசிரியர் குறிப்பிட்டுள்ள தகவல்கள் : ....................................................................
2. புத்தகங்கள், வேலை ஒப்படைகள் போன்றவை மூலம் பெற்ற தகவல்கள்: ..........
   ..........................................................................................................................

3. பெற்றார் மூலம் பெற்ற தகவல்கள் (உண்டெனில்): ..............................................

...................................................................................................................

4. பிற: .........................................................................................................

**E பொழிப்பு**

( மேற்படி தகவல்களையும் உங்களது உணர்வுகளையும் உள்ளடக்கி, பிள்ளை தொடர்பான சுருக்க அறிக்கையொன்று தயாரியுங்கள்.

**F உங்களது விதந்துரைகள்**

1. ...................................................................................................................
2. ...................................................................................................................
3. ...................................................................................................................
4. ...................................................................................................................

அவதானித்தவரின் பெயர்: ..........................................................

அவதானித்தவரின் கையொப்பம்: ..........................................................

அவதானித்த திகதி: ..........................................................

## பிள்ளைகளின் விசேட கல்வித் தேவைகள் தொடர்பில், அவர்களை வழிப்படுத்தத்தக்க இடங்கள்.

அனைத்து வலயக்கல்விக் காரியாலயங்களிலும் விசேட கல்வி மதிப்பீட்டுக் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. இச்செயற்பாடுகளின் போது நீங்கள் விசேட கல்வித் தேவையுடைய ஒரு பிள்ளையை இனங்கண்டு கொண்டால் அப்பிள்ளையை அடுத்தகட்ட நடவடிக்கைக்காக மேற்குறிப்பிட்ட வலயத்துக்கான விசேட கல்வி மதிப்பீட்டுக் குழுவினரிடம் அழைத்துச் செல்வ-தற்கான நடவடிக்கைகளை பெற்றாரின் சம்மதத்துடன் மேற் கொள்ள ஏற்பாடு செய்யவும்.

## விளையாட்டு முற்றம்

தரம் 1 இல் பிரவேசிக்கும் பிள்ளைகளின் சமநிலையான விருத்திக்காக, நுண்மதி விருத்தியோடு, உடல், மனவெழுச்சி, சமூக விருத்தியும் இன்றியமையாதவையாகும். திட்டமிடப்பட்ட களிப்பூட்டத்தக்க ஒரு சூழலில் செயலூக்கத்துடன் நடந்து கொள்ளத்தக்க கற்றல் சந்தர்ப்பங்கள் மாணவர்க்குக் கிடைத்தல் வேண்டும். வகுப்பு மாணவர் ஒவ்வொரு வருக்கும் களிப்பூட்டத்தக்க செயலூக்கத்துடன் செயற்படத்தக்க சந்தர்ப்பங்களை வழங்கும்

ஓர் இடமாக விளையாட்டு முற்றத்தைக் குறிப்பிடலாம். எனவே விளையாட்டு முற்றம் என்பது திறந்த வெளிக் கற்றற் சூழலில் காணப்படும் மிக முக்கியமான இடமாகும்.

பிள்ளைகளின் தேவைகளுக்கும், விருப்பு வெறுப்புகளுக்கும் இயலுமைகள் இயலாமைகளுக்கும் ஏற்பச் செயற்பாடுகளைத் தெரிவு செய்து கொள்வதற்காக, விளையாட்டு முற்றத்தில்

- புகுந்து செல்வதற்கும்
- அசைந்தாடுவதற்கும்
- ஏறுவதற்கும்
- தொங்குவதற்கும்
- எறிதலுக்கும்

சந்தர்ப்பங்கள் இருத்தல் வேண்டும். அவ்வாறே பிரதேசத்துக்கெனத் தனித்துவமான பொருள்களைக் கொண்டு தயாரித்த பாதுகாப்பான பொருத்தமான உபகரணங்களையும் விளையாட்டு முற்றத்தில் சேர்த்துக்கொள்ளலாம்.

## விளையாட்டு முற்றத்தில் பிள்ளைகள் ஈடுபடும் செயற்பாடுகள்

- புகுந்து செல்லல், புரளுதல், ஓடுதல், பாய்தல், தொங்குதல் போன்ற இயக்கத் திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கும்
- இசைவாக்கம், சமநிலை, சந்தம், நெகிழ்ச்சித்தன்மை சரியான மெய்ந்நிலைகளைப் பேணிவருதல் ஆகியவற்றை விருத்தி செய்து கொள்வதற்கும்
- பிள்ளைகளின் கைத்திறன்களை விருத்தி செய்து கொள்வதற்கும்
- ஒத்துழைப்பு, கூட்டாகச் செயற்படல், பகிர்ந்து பரிமாறிக் கொள்ளல், பொறுமை காத்தல், ஒருவருக்கொருவர் உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை விருத்தி செய்து கொள்வதற்கும்
- கூட்டாகச் சேர்ந்து களிப்புறுவதற்கும், மனவெழுச்சிச் சமநிலையைப் பேணுவதற்கும் பயன்படுத்தலாம்.

மேலும் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டத்தில் வெவ்வேறு பாட எண்ணக்கருக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும் விளையாட்டு முற்ற உபகரணங்களைப் பயன் படுத்தலாம்.
உ-ம் : கணித பாடப் பரப்புக்காக:

மேல், கீழ்; தூர, கிட்ட; மேலே, கீழே; சிறிய, பெரிய; மந்தமான, வேகமான; வரிசைப்படுத்தல், எண்ணுதல் போன்ற அடிப்படையான கணித எண்ணக்கருக்கள் தொடர்பான அடிப்படைத்திறன்களை விருத்தி செய்து கொள்ளலாம்.

## மொழிப் பாடப் பரப்புக்காக:


இடமிருந்து - வலமாகக் கண்களைச் கொண்டு செல்வதற்காக, இடஞ்சுழியாகவும் வலஞ்சுழியாகவும் உடலை இயக்க, நாட்டார் பாடல் (ஊஞ்சல் பாடல்) போன்றவற்றைப் பாட, ...........

## சுற்றாடல் சார்ந்த செயற்பாடுகள் பாடப் பரப்புக்காக:


சமூகத்திறன் விருத்திக்காக:

உதாரணம்: கூட்டாகச் செயற்பட, பகிர்ந்து பரிமாறிக்கொள்ள; தமக்குரிய தருணம் வரும்வரை பொறுமை காக்க.

விளையாட்டு முற்றத்தில் பயன்படுத்தும் சில உபகரணங்கள்:
உதாரணங்கள்:



ஒரு பகுதி நிலத்தில் புதைக்கப்பட்ட ரயர்கள்



சமனிலைப் பலகை



சிரட்டை ஏணிக் கயிறு



கயிற்று ஏணி



கூம்பு வடிவ ஏறும் சட்டகம்